*முக்கிய அறிவித்தல்!!*

*அன்பான மொட்டன்ஸ்றூட் வளாகப் பெற்றோர்களே,*

*மாணவர்களின் தமிழ்மொழிக் கல்வித் தொடர்ச்சி தொடர்பான முக்கிய தகவல் மற்றும் பெற்றோர் சந்திப்பு!*

*அன்புடையீர்,*

*மொட்டன்ஸ்றூட் வளாகத்தில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிர்வாகச் சூழ்நிலை தொடர்பாக, பெற்றோர்களாகிய தங்களுக்கு தெளிவானதும் முழுமையானதுமான தகவல்களை வழங்குவது அன்னைத் தலைமை நிர்வாகத்தின் பொறுப்பாகும்.*

***மொட்டன்ஸ்றூட் வளாகத்தில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலை!***

*கடந்த 11.09.2026 வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில், மொட்டன்ஸ்றூட் வளாக நிர்வாகத்தில் பணியிலிருந்த இரு உறுப்பினர்கள் தமது பொறுப்புகளில் இருந்து விலகுவதாக அறிவித்தனர். உடனடியாக அன்னைத் தலைமை நிர்வாகம் இயங்குநிலையில் இருந்த பொறுப்பாளர்களுடன் 11.09.2026 வெள்ளிக்கிழமை 22:15 அளவில் தொடர்புகொண்டு, மாணவர்களின் கல்வி தடைப்படாமல் மறுநாள் பாடசாலையைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தேவையான உதவிகளை வழங்க நாம் நேரடியாக வருவோம் எனத் தெரிவித்தது.*

*எனினும், அதே நள்ளிரவு (12.09.2026 நேரம்:00:52), அன்னைத் தலைமை நிர்வாகத்திற்கு எந்த முன்னறிவிப்பும் வழங்காமல் மறுநாள் பாடசாலை நடைபெறாது என அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து, இயங்குநிலையில் இருந்த உறுப்பினர்களைச் சந்தித்து நிலைமையைத் தெளிவுபடுத்த அன்னைத் தலைமை நிர்வாகம் முயற்சிகளை மேற்கொண்டது. அதற்கான உறுதிப்படுத்தலை 12.09.2026 காலை 08:30 முன்னர் வரங்குமாறும் கேட்கப்பட்டது. தற்காலிகமாக வளாகப் பொறுப்பாளராக அறிவிக்கப்பட்டவர் உட்பட மேலும் சிலரும் தமது பொறுப்புகளில் இருந்து விலகுவதாக அதே நாள் 08:27 இற்கு அன்னை தலைமைக்குத் தெரிவித்துள்ளனர்.*

*கடந்த இரண்டு ஆண்டுகளாக, மொட்டன்ஸ்றூட் வளாகப் பெற்றோர்களை நேரடியாகச் சந்தித்து கலந்துரையாட அன்னைத் தலைமை நிர்வாகம் மேற்கொண்ட முயற்சிகள் பல தடவைகள் நிறைவேறாத நிலை ஏற்பட்டுள்ளமை எமக்கு மிகவும் கவலையளிக்கிறது. குறிப்பாக, பெற்றோர்களுக்கும் அன்னைக்கும் இடையிலான நேரடித் தொடர்பையும் புரிந்துணர்வையும் பாதிக்கும் வகையில் சில செயற்பாடுகள் இடம்பெற்றிருப்பது எமது நம்பிக்கைக்கு முரணானதாகக் கருதுகிறோம்.*

*இந்நிலையில், எவ்வாறான நிர்வாகச் சூழ்நிலை ஏற்பட்டாலும் மாணவர்களின் கல்வி எந்தவிதத்திலும் பாதிக்கப்படக்கூடாது என்பதே அன்னைத் தலைமை நிர்வாகத்தின் முதன்மையான நோக்கமாகும்.*

*அன்னை தலைமையின் முதன்மையான பொறுப்பு- வளாக மாணவர்களின் கல்வித் தொடர்ச்சி!*

*நோர்வே முழுவதும் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் வளாகங்கள் ஒன்றிணைந்து, நோர்வேயில் பிறந்து வளர்ந்து வரும் மூன்றாம் தலைமுறை தமிழ் மாணவர்களின் தேவைகள், மொழித்திறன் மற்றும் வாழ்வியல் சூழல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு புதிய பாடத்திட்டத்தையும் பாடநூல்களையும் உருவாக்கியுள்ளோம்.*

*குறிப்பாக, 5ஆம் ஆண்டு முதல் 11ஆம் ஆண்டு வரையிலான புதிய பாடநூல்கள், மாணவர்களின் வயது, மொழித்திறன், நோர்வே வாழ்வியல் சூழல் மற்றும் கற்றல் தேவைகளைக் கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.*

*இப்பணிகளில் மொட்டன்ஸ்றூட் ஆசிரியர்களின் பங்களிப்புகளும் இடம்பெற்றுள்ளன. மேலும், அண்மையில் நடைபெற்ற சந்திப்பில் பல மொட்டன்ஸ்றூட் ஆசிரியர்கள் புதிய பாடநூல்கள் தொடர்பாக நேர்மறையான கருத்துகளையும் தெரிவித்திருந்தனர்.*

*மொட்டன்ஸ்றூட் பகுதியில் கல்வியைத் தொடர்வதற்கான ஏற்பாடுகள்!*

*தற்போதைய சூழ்நிலையால் மாணவர்களின் கல்வி தடைபடாமல் இருக்க, மொட்டன்ஸ்றூட் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் தமிழ்க் கல்விச் செயற்பாட்டை விரைவாகத் தொடர்வதற்கான நடவடிக்கைகளை அன்னைத் தலைமை நிர்வாகம் முன்னெடுத்து வருகிறது.*

*இதனைக் கருத்திற்கொண்டு,*

- *மாணவர்களுக்கு புதிய பாடநூல்கள் வழங்குதல்;*
- *ஆசிரியர்களை ஒருங்கிணைத்தல்;*
- *தேவையான நிர்வாக ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்;*
- *மாணவர்களின் கல்வித் தொடர்ச்சியை உறுதி செய்தல்*

*ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.*

*தற்போதைய வளாகத்தில் பணியாற்றிய ஆசிரியர்கள் உட்பட பல ஆசிரியர்கள் அன்னைத் தலைமை நிர்வாகத்துடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.*

*நேரடி வகுப்புகளுக்கான ஏற்பாடுகள் முழுமையடையும் வரையில், தற்காலிகமாக இணையவழிக் கல்வியை ஆரம்பிப்பதற்கான திட்டமும் முன்னெடுக்கப்படுகிறது. பின்னர், மாணவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு இயன்றவரை அருகில் நேரடி வகுப்புகள் நடைபெறும் வகையில் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.*

**போட்டிகள் மற்றும் கல்விச் செயற்பாடுகள் தொடரும்!**

மாணவர்களின் தமிழ்மொழித் திறன், அறிவு மற்றும் ஆர்வத்தை வளர்ப்பதற்காகத் திட்டமிடப்பட்டுள்ள,

திருக்குறள் ஒப்பித்தல் போட்டி, அறிவாடல் போட்டி, மழலையர் முற்றம், நிலாமுற்றம், அறிவுமுற்றம் ஏனைய மாணவர் திறன் மற்றும் கல்விசார் போட்டிகள்

உள்ளிட்ட செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாணவர்கள் புதிய பாடநூல்களைப் பயன்படுத்திக் கற்று, தங்களது தமிழ்மொழித் திறனையும் பண்பாட்டு அடையாளத்தையும் தொடர்ந்து வளர்த்துக்கொள்ளும் வாய்ப்பு உறுதி செய்யப்படும்.

பெற்றோர் சந்திப்பு – அனைவரும் இணைந்துகொள்வோம்!

அன்பான பெற்றோர்களே,

தற்போதைய சூழ்நிலை தொடர்பாக உங்களிடம் எழும் கேள்விகள், சந்தேகங்கள் மற்றும் கருத்துகளுக்கு நேரடியாக விளக்கம் வழங்குவதுடன், பெற்றோர்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் கேட்டறிந்து எதிர்கால நடவடிக்கைகளை இணைந்து முன்னெடுப்பதற்காக அன்னைத் தலைமை நிர்வாகம் பெற்றோர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்யவுள்ளது.

இச்சந்திப்பில்,

• தற்போதைய நிர்வாகச் சூழ்நிலை;

• புதிய பாடத்திட்டம் மற்றும் பாடநூல்கள்;

• மாணவர்களின் கல்வித் தொடர்ச்சி;

• ஆசிரியர் ஏற்பாடுகள்;

• இணையவழி மற்றும் நேரடி வகுப்புகள்;

• தேர்வுகள் மற்றும் போட்டிகள்;

• எதிர்கால கல்விச் செயற்பாடுகள்

• இதரவிடயம்

தொடர்பாகத் தெளிவுபடுத்தப்படும்.

மேலும், பெற்றோர்கள் தங்களது கேள்விகள், கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை நேரடியாக முன்வைத்து கலந்துரையாடும் வாய்ப்பும் ஏற்படுத்தப்படும்.

பெற்றோர் சந்திப்பு!

நாள் மற்றும் நேரம் விரைவில் அறிவிக்கப்படும்.

இடம்: இணையவழி / தமிழர் வள ஆலோசனை மையக் கட்டிடம்

மொட்டன்ஸ்றுட் வளாகப் பெற்றோர்கள் அனைவரும் தவறாது கலந்துகொண்டு, மாணவர்களின் எதிர்காலக் கல்வி தொடர்பான இக்கலந்துரையாடலில் இணைந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தற்போதைய நிர்வாக மாற்றத்தால் மாணவர்களின் தமிழ்க் கல்வி எந்தவிதத்திலும் இடைநிறுத்தப்படக்கூடாது என்பதில் அன்னைத் தலைமை நிர்வாகம் உறுதியாக உள்ளது.

மாணவர்களின் கல்வித் தொடர்ச்சி, தமிழ்மொழி வளர்ச்சி மற்றும் தமிழ் அடையாளப் பேணல் ஆகியவை எமது முதன்மையான பொறுப்புகளாகும். இதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அன்னைத் தலைமை நிர்வாகம் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் மேற்கொள்ளும்.

தற்போதைய சூழ்நிலையைப் பற்றிய கருத்து வேறுபாடுகளைத் தாண்டி, மாணவர்களின் நலனையும் எதிர்காலத்தையும் முன்னிறுத்தி பெற்றோர்–ஆசிரியர்–அன்னைத் தலைமை நிர்வாகம் என நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

மாணவர்களின் கல்விப் பயணம் தொடர வேண்டும்.

தமிழ்மொழிக் கல்வி வளர வேண்டும்.

தமிழ் அடையாளம் தலைமுறைகள் கடந்தும் நிலைத்திருக்க வேண்டும்.

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்

நன்றி.

«தமிழ் எங்கள் அடையாளம்»

**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்**
**தலைமை நிர்வாகம்**